Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    வைகாசி 25    (07 - 06 - 1992)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 110

## பாதுகாப்பு வரி உயர்வால் மருந்துகள் விலை கூடியது

பாதுகாப்பு வரி அதிகரிக்கப்பட்டதன் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து மருந்துகளினதும் விலைகள் இவ்வாரம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன என மருந்துவகை இறக்குமதியாளர் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் சகல மருந்து வகைகளினதும் விலை மூன்று சத வீதத்தால் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது தம்மிடமிருந்து அறவிடப்படும் பாதுகாப்பு வரியையும் செலவுடன் சேர்க்கவேண்டியிருப்பதாலேயே இந்த அதிகரிப்பு என இறக்குமதியாளர் தெரிவிக்கின்றனர். இலங்கையில் சுமார் 200 நிறுவனங்கள் சுமார் 600 வகை மருந்துகளை இறக்குமதி செய்கின்றன. (4ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் ராணுவ நடவடிக்கை எந்நேரத்திலும் ஆரம்பமாகலாம்

## பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு

யாழ். குடாநாட்டில் எந்நேரமும் புதிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படலாம் என கூட்டுப்படை தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 28 ஆம் திகதி வடக்கில் ஆரம்பிக்கப்பட்ட 'சண்டை மாருதம்' என்னும் இராணுவ நடவடிக்கை கடந்த புதன் கிழமை யுடன் இடைநிறுத்தப்பட்டன சண்டை மாருதம் நடவடிக்கைகளின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பே இவ் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

தற்பொழுதுமீண்டும் புதிய தொரு இராணுவ நடவடிக்கை யாழ். குடாநாட்டில் எப்பொழுதும் ஆரம்பமாகலாம் என இவ் இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார். சண்டை மாருதம் நடவடிக்கை முடிவடைந்து விட்டது. ஆனால் விடுதலைப்புலிகள்மீது தொடர்ந்தும்தாக்குதல்கள் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

## காங்கேசன் மூலம் உணவுப்பொருள் எடுத்துவர இராணுவம் தடை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக உணவுப்பொருள்களை எடுத்து வருவதற்குச் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இத்துறைமுகத்தின் ஊடாக உணவுப்பொருள்கள் எடுத்து வரப்படுவது கடந்த மாதத்துடன்நிறுத்தப்பட்டுவிட்டது இத்துறைமுகத்தின் ஊடாக மீண்டும் உணவுப்பொருள்களை எடுத்துவருவதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் முயற்சி எடுத்தனர். எனினும் இம்முயற்சி (4ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணத் தவறினால் ஆட்சியை கலைக்கவேண்டும்

### - சு.க. செயலாளர்

இனப்பிரச்சினைக்கு அரசு தீர்வு ஒன்றைக் காணத் தவறும் பட்சத்தில் ஆட்சியைக் கலைத்து தேர்தலைச் சந்திக்க அரசு முன்வரவேண்டுமென்று சிறிலங்கா சுதந்திரக் கட்சிச் செயலாளர் தர்மசிறிசேனநாயக்கா கூறினார்.

## தமிழ், முஸ்லிம் குழுக்கள் பிரேமாவைச் சந்திப்பர்

(கொழும்பு)

லிம், தமிழ் கட்சிகள் ஜனாதி

## வீரச்சாவு



### ஆலயங்கள் மீது

## விமானக் குண்டு வீச்சு நடாத்தவில்லையாம்

(கொழும்பு)

வலி வடக்கில் விடுதலைப் புலிகளின் முகாம்களின் மீதே விமானத் தாக்குதல்களை மேற்கொண்டோமே தவிர ஆலயங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டு பொய்யானது என கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மநாட்டில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் நாம் விமானததாக்குதல்களை நடாத்தியது உண்மைதான் ஆனால் ஆலயங்கள், பாடசாலைகள், மக்கள் குடியிருப்புகள் மீது தாக்குதலை நடாத்தவில்லை. விடுதலைப் புலிகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளின் மீதே தாக்குதல்களை மேற்கொண்டோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பேயாடி கூழாங்குளத்தில் வெடிகுண்டுப் புரளி

(வவுனியா)

வவுனியா பேயாடி கூழாங்குளம் இராணுவ சோதனை முகாம் பகுதியில் வெடிகுண்டுப் புரளி ஏற்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் பதற்றமடைந்து அநாதரவாகக் கிடந்த பொதி ஒன்றைச் சோதனை செய்து பார்த்ததில் அதனுள் களிமண் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நான்காம் திகதி பயணிகள் போக்குவரத்து இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம் அநாதரவான நிலையில் பொதி ஒன்று காணப்பட்டது.

இதனை அடுத்து உஷார் அடைந்த இராணுவத்தினரும், பொலிசாரும், பொது மக்கள் மீது கெடுபிடி செய்யத் தொடங்கினர்.

பின்னர் பொதியை சோதனை செய்து பார்த்ததில் அதனுள் களிமண் காணப்பட்டதாம். இச்சம்பவத்தை அடுத்து இராணுவத்தினர் ஆத்திரமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

## வீரச்சாவு



2ஆம் லெப். தேவன்



வீரவேங்கை பாண்டியன்

04 - 06 - 1992 அன்று தெல்லிப்பழைப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவு அடைந்தோர்:-

2-ம் லெப்டினன் தேவன் (ராஜ்-கந்தசாமி மகிழ்ராஜ், காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்). வீரவேங்கை-பாண்டியன் (ஞானசிங்கம் - கனகலிங்கம் வீரபத்திரர் ஆலயம், 7 ம் வட்டாரம், முனைக்காடு மட்டக்களப்பு)

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# எடுத்துவர இராணுவம் தடை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக உணவுப்பொருள்களை எடுத்து வருவதற்குச் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இத்துறைமுகத்தின் ஊடாக உணவுப்பொருள்கள் எடுத்து வரப்படுவது கடந்த மாதத்துடன் நிறுத்தப்பட்டுவிட்டது. இத்துறைமுகத்தின் ஊடாக மீண்டும் உணவுப்பொருட்களை எடுத்து வருவதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் முயற்சி எடுத்தனர். எனினும் இம்முயற்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணத் தவறினால் ஆட்சியை கலைக்கவேண்டும்

**- சு.க. செயலாளர்**

இனப்பிரச்சினைக்கு அரசு தீர்வு ஒன்றைக் காணத் தவறும் பட்சத்தில் ஆட்சியைக் கலைத்து தேர்தலைச் சந்திக்க அரசு முன்வரவேண்டுமென்று சிறிலங்கா சுதந்திரக் கட்சிச் செயலாளர் தர்மசிறிசேனநாயக்கா கூறினார்.

பாராளுமன்றத்தில் அரசு எதிர்க் கட்சிகளுக்கு இடம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ், முஸ்லிம் குழுக்கள் பிரேமாவைச் சந்திப்பர்

[கொழும்பு]

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகுறித்து தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேசவுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மத்தியகுழு பாராளுமன்றத் தெரிவுக்குழுவை பகிஷ்கரிப்பதென்று எடுத்த முடிவையடுத்து உருவாகியுள்ள நெருக்கடிநிலை தொடர்பாக முஸ்லிம், தமிழ் கட்சிகள் ஜனாதிபதியுடன் பேசவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பகிஷ்கரிப்பை கைவிட சுதந்திரக்கட்சி ஆராயும்

**-மங்களமுனசிங்க**

[கொழும்பு]

தேசிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வின் முக்கியத்துவத்தை மனதில் கொண்டு பாராளுமன்ற தெரிவுக்குழு விரைவில் மீண்டும் கூடும் என தெரிவுக்குழுவின் தலைவர் மங்களமுனசிங்கா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினைக்கு தீர்வு

(4ஆம் பக்கம் பார்க்க)

## தடையை நீக்குமாறு இந்திய மத்திய அரசிடம் திராவிடர் சழகம் கோரிக்கை

(சென்னை)

இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை அகற்றுமாறு திராவிடர் சழகம் இந்திய மத்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

கழகத்தின் பொதுச் செயலாளர் கி.வீரமணி தலைமையில் திருச்சியில் கூடிய கட்சியின் மத்திய குழு இது தொடர்பாக தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது.

தமிழ் ஈழத்திற்காக புலிகள் ஆயுதப்போராட்டத்தை நடத்தும் இலங்கையில் அவ்வியக்கம் தடை செய்யப்படாமல் இருக்கும் போது, இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கம் இந்தியாவில் இல்லை ராஜீவ் காந்தி கொலைக்கோ பத்மநாபா கொலைக்கோ புலிகள் பொறுப்பு என்று தடை உத்தரவில்குறிப்பிடவும் இல்லை.

சுதந்திரமான தமிழ் ஈழமொன்றே இலங்கையில் தமிழர்களின் பாதுகாப்பையும் பத்திரத்தையும் கௌரவத்தையும் உறுதி செய்ய முடியும் என்பதால், புலிகள் மீதான தடையை மத்திய அரசாங்கம் அகற்ற வேண்டும் என அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகள் மீதான தடையை நீக்குக: திருச்சி எங்கும் சுவரொட்டிகள்

புலிகளுக்கு விதித்துள்ள தடை உத்தரவை ரத்துச் செய்யக்கோரியும் தடை உத்தரவை பிறப்பித்த மத்திய அரசைக் கண்டித்தும் சிவப்பு எழுத்துக்களால் எழுதப்பட்ட பெரிய அளவிலான சுவரொட்டிகளில் திருச்சிநகர் முழுவதும் ஒட்டப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

சுமார் இரண்டு அடி நீளமும் இரண்டு அடி அகலமும் கொண்ட இந்தச் சுவரொட்டிகள் 'மத்திய மாநில அரசுகளே புலிகளுக்கு விதித்த தடையுத்தரவை ரத்துச் செய்'' 'போராளிகளுக்கு அரசியல் புகலிடம் வழங்கிய புரட்சிகர மற்றும் தமிழ் இன ஆதரவு இயக்கங்களை ஒடுக்கவே புலிகளுக்கு தடை'' ''தமிழ் இன ஆதரவாளர்களே ஒரு அணியில் திரள்வீர்'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்டு ஒட்டப்பட்டிருந்தன.

புலிகளுக்கு தடை விதித்ததின் பின்னால் கும்பகோணத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன தற்போது திருச்சியில் ஏராளமாக ஒட்டப்பட்டுள்ளன.

இச்சம்பவங்கள் மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ர்ந்தும் தாக்குதலினை நடத்தப் படும் எனவும் தெரிவித்தார்.

## வீரச்சாவு



லெப். அருணன்



2 ஆம் லெப். குமுதன்



2 ஆம் லெப். அமிர்தலிங்கம்

1- 6- 1992 அன்று முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவு அடைந்தோர்:

லெப்டினன் அருணன் (வேனாட் அழகையா தங்கராசா கோட்டைக்கல்லாறு, மாக்கட் வீதி, மட்டக்களப்பு), 2 ஆம் லெப்டினன் குமுதன் (மோகன் தம்பிமுத்து டேரின்பம் மாணிக்கமடு, இறக்காமம் அம்பாறை), 2ஆம் லெப்டினன்

(4ஆம் பக்கம் பார்க்க)

தெரிவித்துள்ளார்.

ளார்.

## பேயாடி கூழாங்குளத்தில் வெடிகுண்டுப் புரளி

(வவுனியா)

வவுனியா பேயாடி கூழாங்குளம் இராணுவ சோதனை முகாம் பகுதியில் வெடிகுண்டுப் புரளி ஏற்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் பதற்றமடைந்து அநாதரவாகக் கிடந்த பொதி ஒன்றைச் சோதனை செய்து பார்த்ததில் அதனுள் களிமண் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நான்காம் திகதி பயணிகள் போக்குவரத்து இடம் பெற்றுக்கொண்டிருந்த சமயம் அநாதரவான நிலையில் பொதி ஒன்று காணப்பட்டது.

இதனை அடுத்து உஷார் அடைந்த இராணுவத்தினரும், பொலிசாரும், பொது மக்கள் மீது கெடுபிடி செய்யத் தொடங்கினர்.

பின்னர் - பொதியை சோதனை செய்து பார்த்ததில் அதனுள் களிமண் காணப்பட்டதாம். இச்சம்பவத்தை அடுத்து இராணுவத்தினர் ஆத்திரமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

### வீரவேங்கை பாண்டியன்

04 - 06 - 1992 அன்று தெல்லிப்பழைப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவு அடைந்தோர்:-

2-ம் லெப்டினன் தேவன் (ராஜ்-கந்தசாமி மகிழ்ராஜ், காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்). வீரவேங்கை-பாண்டியன் (ஞானசிங்கம் - கனகலிங்கம் வீரபத்திரர் ஆலயம், 7 ம் வட்டாரம், முனைக்காடு மட்டக்களப்பு)

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஜோசெப் முகாமிலிருந்து இளைஞர்கள் தப்பினர்

### மூன்று இராணுவம் சுட்டுக்கொலை

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தின் ஜோசெப் முகாமிலிருந்து மூன்று இராணுவத்தினரைச் சுட்டுக்கொன்று விட்டு பல கைதிகள் தப்பித்து ஓடிவிட்டனர் என்று தகவல் கிடைத்துள்ளது.

கடந்த நான்காம் திகதி இரவு, விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளே தப்பித்து ஓடியுள்ளனர்.

சம்பவதினம் காவலுக்கு நின்ற இராணுவத்தின் துப்பாக்கிளைப் பறித்து திடீரென்று அவர்களை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்த இந்தக் கைதிகள் முகாமை விட்டு வெளியேறியுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது மூன்று இராணுவத்தின் வீத

(4ஆம் பக்கம் பார்க்க)

### துப்பாக்கி பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

மண்டை தீவுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக்காலை 6 15 தொடக்கம் 7 00 மணிவரை யாழ் நகரின் கோட்டை, தொலைத் தொடர்பு நிலையம் மற்றும் கரையோரப்பகுதிகளை நோக்கி பரவலான துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டனர். (பா)

## பருத்தித்துறைக்கு மேலதிக கப்பல் வருவிக்க செஞ்சிலுவை முயற்சி

(யாழ் பாணம்)

பருத்தித்துறைத்துறைமுகத்திற்கு மேலதிக கப்பல்களை வரவழைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் யாழ். செயலக அதிகாரிகளும் இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. (அ)

## மனோதிடம் மிக்க புலிகளை வெற்றி பெறுவது சாத்தியமற்றது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் உயர்ந்த மனோதிடம் மிக்கவர்கள் அவர்களின் மனோதிடத்தின் முன் நின்று போராடி வெற்றி பெறுவதென்பது சாத்தியமற்றது'' இவ்வாறு சிங்கள வார இதழான 'ராவய' பத்திரிகைக்கு கூட்டுப்படைத் தலைமையக அதிகாரி ஒருவர் வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அச்செவ்வியில் அவர்மேலும் தெரிவிக்கையில், நாம் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றுவதானால் பெருந்தொகையான இராணுவத்தினரை இதற்கு பயன்படுத்தவேண்டிவரும் இந்நடவடிக்கையின்போது 4000 முதல் 5000 இராணுவத்தினர் வரை பலியாகவோ, காயமடையவோ நேரிடும். இதேவேளை முப்பதாயிரம் பொதுமக்களும் இறக்கவோ, காயமடையவோ கூடும்.

இவ்வாறான பாரிய இழப்புக்களுக்கு மத்தியிலும் நாம் யாழ் குடாநாட்டைக் கைப்பற்றினாலும் விடுதலைப்புலிகளை அழிக்கவோ, நசுக்கவோ அல்லது அங்கிருந்து அகற்றவோ முடியாது.

**காடு நகரமானால் நாடு நரகமாகும்**

# வரி விளம்பரம்


### புலமைப் பரிசில்

அரசாங்கத்தால் 26-04-92 [ஞாயிறு] நடத்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன. பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விசேட கழிவுண்டு. பரீட்சைப் பகுதி Bond கல்வி நிறுவனம். யாழ்ப்பாணம். [சி-4515]

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமை பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம்; விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes 58A. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். [சி/4516]


### உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

உரும்பராய் ஒஸ்கா விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆடும் அணிகள்: பாடும்மீன் (A) எதிர் அரியாலை அணி மோதும். இவ்வாட்டம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் 07 - 06 - 1992- 4. 30 மணிக்கு நடைபெறும். ( 2643 )

### பழைய மாணவர் கூட்டம்

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வி. சே. ஏகாம்பரநாதன் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

### அன்பளிப்பு

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் வேண்டுகோளின் பேரில் வைத்தியசாலைக்கு ''பெற்றோமாக்ஸ்'' ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது. [25]

# வீடுகளில் முயல் வளர்க்க கடைப்பிடிக்க வேண்டியவை

வீட்டில் முயல் வளர்ப்பதில் ஆர்வமுடையவரும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினர் 1992 ஆம் ஆண்டுக்கென நடத்திய உற்பத்தி எழுச்சி வாரப் போட்டியில் யாழ். மாவட்டத்தில், முயல் வளர்ப்பில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டவருமான திரு. மா. ஈஸ்வரபாதம் இக்கட்டுரையை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாங்கள் ஒரு சோடி முயல் வளர்க்க வேண்டுமாயின் முதலில் இரு கூடுகள் அமைக்க வேண்டும். கம்பி வலை ($\frac{1}{2}$ இஞ்சி) கூடுகள் பாதுகாப்பானது. ஆண் முயல் கூடு சுமார் 2 அடி அகலம், 2 அடி நீளம், $1\frac{1}{2}$ அடி உயரம் இருத்தல் வேண்டும். பெண் முயலின் கூடு 3 அடி நீளம் 2 அடி அகலம் $1\frac{1}{2}$ அடி உயரம் இருக்க வேண்டும். பெண் முயலின் கூட்டின் உள்ளே - 18 இஞ்சி நீளம், 10 இஞ்சி அகலம், 1 அடி உயரமான பலகைக்கூடு ஒன்று இணைக்கப்பட வேண்டும். வெப்பம் குறைவான குளிர்மையாக உள்ள நல்ல காற்றோட்டம் உள்ள இடத்தில் கூடுகள் இருத்தல் நன்று. பெண் முயலை ஆண் முயலின் கூட்டின் உள்ளே ஒருநாள் முழுவதும் விட்டு அதன் பின்பு பிரித்து விடவேண்டும். ஆண் முயலுடன் சேர விட்டு 14 நாட்களின் பின்பு பெண்முயல் சினைப்பட்டுள்ளதா? என்பதை கால் நடை வைத்தியர் மூலம் தெரிந்து கொள்ளலாம். அல்லது பெண் முயலின் செய்கைகள் மூலமும் ஓரளவு தெரிந்து கொள்ள முடியும். புற்கள், சிறுகடதாசி துண்டுகள் இவற்றை தனது வாயினால் எடுத்து கூட்டின் உள்ளே அடுக்குதல், ஆண் முயலை சேர்த்து விடும்போது அழுகின்ற சத்தம் போன்ற அறிகுறிகள் இருக்கும். ஆண் முயலுடன் சேர்த்து விட்டு அதிலிருந்து சரியாக 30 ஆம் நாள் குட்டிகளை ஈனும். ஒரு முயல் 2 குட்டிகள் தொடக்கம் 10 குட்டிகள் வரையில் ஈனும். சில முயல்கள் குட்டிகளுக்கு பால் கொடுக்கமாட்டாது. இதனால் குட்டிகள் இறந்து விடக்கூடும். இதை நாங்கள் அவதானிக்கவேண்டும். முயல் குட்டிகளுக்கு பால் கொடுக்காவிட்டால் பெண் முயலின் கூட்டில் இருக்கும் சிறு பெட்டியில் முயலையும் குட்டிகளையும் சேர்த்து 5 - 10 நிமிஷங்கள் மூடி பின்பு திறக்கப்பட வேண்டும். இதன் மூலம் குட்டிகள் பால் குடிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. ஈன்ற குட்டிகள் சரியாக 10-ம் நாள் கண் திறக்கும். $1\frac{1}{2}$ மாதங்கள் வரை குட்டிகள் தாயிடம் பால் குடிக்கும். அதன் பின்பு குட்டிகளை பிரித்து வளர்ப்பவர்களுக்கு விற்பனை செய்யலாம். இறைச்சிக்காக விற்க வேண்டுமாயின் முயல் குட்டிகளை சுமார் 4 மாதங்கள் வரை வளர்க்க வேண்டும் அப்போது அதன் நிறை $1\frac{1}{2}$ கிலோவாக இருக்கும். தாய் முயலில் இருந்து $1\frac{1}{2}$ மாதங்களில் குட்டிகளை பிரித்த பின்பு தாய் முயலை ஆண் முயலுடன் இனச் சேர்க்கைக்காக விடலாம். முயல்களின் முக்கிய உணவாக முள் முருக்கு, இப்பில் இப்பில், புல்வகை கொடுக்கப்பட வேண்டும். சோறு, பாண் முதலியன இடையிடையே கொடுக்கலாம். முயல்களுக்கு ஏற்படுகின்ற முக்கிய நோய் குட்டை நோய் ஆகும். முகம், காது போன்ற பகுதிகளில் ஏற்படும் இந்நோய் கவனிக்காவிட்டால் உணவு உண்ணாமல் முயல்கள் இறக்கக்கூடும். இந்நோய் கண்டதும் சிறிதளவு நெல்லிக் கெந்தகம் எடுத்து மாவாக்கி அதனுடன் சிறிதளவு தேங்காய் எண்ணெய் விட்டு கலக்கி குட்டை பிடித்த இடங்களில் ஒரு நாளைக்கு ஒருமுறை இரண்டு நாட்களுக்கு தடவிவிடவும். உடனடியாக சுகம் ஏற்படும். முயல்களை நாங்கள் தூக்கும் போது ஒரு கையினால் அதன் இரு காதுகளிலும் பிடித்து மறுகையினால் முயலின் அடிப் பகுதியை தாங்கிய வண்ணம் பிடித்தல் வேண்டும். ஒரு பெண் முயல் வருஷத்திற்கு 4 அல்லது 5 தடவைகள் ஈனும். ஒரு முயலில் இருந்து வருடத்திற்கு சராசரி 25 குட்டிகளை பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் ஒரு பெண் முயலில் இருந்து ஒரு வருடத்திற்கு சுமார் 1000/- ரூபா வருமானமாக கிடைக்கும். முயல் வளர்க்க விரும்புபவர்கள் கீழ் காணும் விலாசத்தில் உள்ள எமது முயல் பண்ணைக்கு வருகை தந்து முயல்கள் பற்றிய மேலதிக விபரங்களையும் கூடு அமைப்பு முறைகள் பற்றியும் தெரிந்து கொள்ளலாம், ஈஸ்வரன் ஸ்டோர்ஸ், அரசடி வீதி, சாரதா ஆச்சிரமம் அருகில் புலோலி கிழக்கு, பருத்தித்துறை

# இவ்வருடத்தில் மட்டும் 15,000 ஆசிரியர் நியமிக்கப்பட்டனர்

**- கல்விச்சேவை ஆணைக்குழு தகவல்**

(கொழும்பு)

கல்விச் சேவைகள் சபை இந்த வருடத்திற்குள் 15,000 ஆசிரிய நியமனங்களை வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வழங்கியதன் மூலம் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்த்துள்ளதாகவும், பற்றாக்குறை என்ற பேச்சுக்கே இடமிருக்காது என்றும் கல்விச்சேவைகள் செயலாளர் தெரிவித்துள்ளார்.

2300 ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும அவர் தெரிவித்தார்.

# தீவகப் பிரிவின் கலைவிழா இன்று (1992-06-07)

06-06-1992 அன்று நடைபெறவிருந்த தீவகப் பிரிவின் கலைவிழா தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறவில்லை ஆகவே மேற்படி கலைவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு அரியாலை திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது இதில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் சிறப்புரையாற்றுவார்கள். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளாக நாதஸ்வரக் கச்சேரி, கிராமிய நடனம், நாட்டிய நாடகம், தாளலயம், இன்னிசைக்கச்சேரி. சமூக நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம் பெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

### விவாகப் பதிவாளர் நியமனம்

பருத்தித்துறை மாவட்ட பதிவாளர் அலுவலக இலிகிதர் திருமதி சகுந்தலா பாலச்சந்திரன் பருத்தித்துறை மேலதிக மாவட்ட பதிவாளரினால் விவாகப் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (25)

# நினைவு கூருகின்றோம்...

## 1992-06-07

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

★ அன்பு (செல்லத்தம்பி அன்பழகன் - அக்கரைப் பற்று, அம்பாறை.)

★ பவா (நவரட்ணராஜா கோபாலகிருஷ்ணன் - அக்கரைப்பற்று, அம்பாறை.)

★ இராசன் (நாகமணி இராசலிங்கம் - அக்கரைப் பற்று, அம்பாறை )

கிளிநொச்சியில் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின்போது வீரச்சாவெய்திய -

கீரோராஜ் (குலசேகரன் கெங்காதரன் - புனையிரத நிலைய வீதி, மல்லாகம்.)

தீசன் (சின்னத்துரை மனோகரன் - மல்லாகம்)

குட்டித்தம்பா (சண்முகரத்தினம் கணேசானந்தன்- சுளிபுரம்)

சசி | வன்னி (இராசரத்தினம் சசீந்திரன் - அரியாலை)

இதேசம்பவத்தின்போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட - 4 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

★ பதுர்த்தீன் | குஞ்சான் (சாலித்தம்பி ஆதம் பாவா - அக்கரைப்பற்று, அம்பாறை.)

★ சைமன் (நா. கிருபைராசா - அக்கரைப்பற்று, அம்பாறை.)

# யாழ். வந்துள்ளனர்

[யாழ்ப்பாணம்]

இரட்சணிய சேனை (சல்வேசன் ஆமி) எனப்படும் கிறிஸ்தவ மதப் பிரிவைச் சேர்ந்த இயக்கத்தின் இரண்டு அதிகாரிகள் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் மேஜர் தரத்தைச் சேர்ந்தவர் எனவும், மற்றவர் லெப்டினன்ட் தரத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரியவருகிறது.

# சிறுவர் பற்றி மாநாடு ஜெனிவாவில் ஆரம்பம்

(கொழும்பு)

சிறுவர் உழைப்பு ஜனநாயகம் சம்பந்தமாக சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் ஒழுங்கு செய்துள்ள மாநாடு ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது.

2000 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். உலகம் முழுவதுமுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் நோக்கமாகும்.

கோடிக்கணக்கான சிறுவர்கள் தொழிலாளர்களாக்கப்பட்டு சுரண்டப்படுகின்றனர். இந்த நிலை மேலும் மோசமடைந்து காணப்படுவதாக ஐ நா. வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் 1992 ஆம் ஆண்டு அறிக்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தைகள் எவ்வாறு சுரண்டப்படுகின்றனர் என்றும் சிறுவர்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது தூரகிழக்கு நாடுகளில் பெரும் வர்த்தகமாகமாறியுள்ளதையும் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரதமர் டி. பி விஜயதுங்கா இக்கூட்டத்தில் கலந்துகொள்கிறார்.

# ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

சனசமூக நிலைய நிர்வாகிகளையும், பாலர் பாடசாலை ஆசிரியர்களையும் சந்திக்கும் நிகழ்ச்சி ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சியிலும், திங்கட்கிழமை (8 6-92) வடமராட்சிப் பகுதியிலும் நடைபெறவுள்ளது.

வடமராட்சியில் தென்மேற்கு பிரதேசசபை வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்கு உட்பட்ட நகரசபைப் பகுதிகளில் நடைபெறும். காலை 10.00 மணிக்கு நெல்லியடி பொது நூலகத்திலும், 11.00 மணிக்கு வல்வெட்டித்துறையிலும் நடைபெறவுள்ளது.

தென்மராட்சியில் காலை 9.00 மணிக்கு கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்திலும், 10.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும், 11.00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்

# சிறிலங்கா பாதுகாப்பு செலவு 10 ஆண்டில் 15 மடங்காகியது


## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4.00, 6.00 மணி

காட்சிகளாகக் காண்பிக்கப்படுகின்றது.

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங் கம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபி விருத்திச் சபையின் வேண்டு கோளின் பேரில் வைத்தியசா லைக்கு ''பெற்றோமாக்ஸ்'' ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது. [25]

ஸ்தன மதப் பிரிவைச் சேர்ந்த இயக்கத்தின் இரண்டு அதிகாரிகள் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் மேஜர் தரத்தைச் சேர்ந்தவர் எனவும், மற்றவர் லெப்டினன்ட் தரத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரியவருகிறது.


## ஸ்ரீதர் திரையரங்கில்

**தினசரி மாலை 4.00 மணிக்கு**
சனி, ஞாயிறு தினங்களில்
**மாலை 4.00, 6.00 மணி**
காட்சிகளாகக் காண்பிக்கப்படுகின்றது.

**VIPER**

(வஞ்சக தன்மையுடைய ஒருவன்)

(ஜ/4509)


கம் சம்பந்தமாக சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் ஒழுங்கு செய்துள்ளமாநாடு ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது.

2000 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். உலகம் முழுவதுமுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் நோக்கமாகும்.

கோடிக்கணக்கான சிறுவர்கள் தொழிலாளர்களாக்கப்பட்டு சுரண்டப்படுகின்றனர். இந்த நிலை மேலும் மோசமடைந்து காணப்படுவதாக ளது.

இதே வேளை சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் 1992 ஆம்ஆண்டு அறிக்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தைகள் எவ்வாறு சுரண்டப்படுகின்றனர் என்றும் சிறுவர்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது தூரகிழக்கு நாடுகளில் பெரும் வர்த்தகமாகமாறியுள்ளதையும் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரதமர் டி பி விஜயதுங்கா இக்கூட்டத்தில் கலந்துகொள்கிறார்.

# சிறிலங்காபாதுகாப்பு செலவு 10 ஆண்டில் 15 மடங்காகியது

சிறிலங்காவின் பாதுகாப்புச் செலவினம் கடந்த பத்து வருடங்களில் பதினைந்து மடங்கால் அதிகரித்துள்ளது.

1982 ஆம் ஆண்டு 1. 2 மில்லியனாக இருந்த சிறிலங்கா முப்படைகளுக்குமான 'பாதுகாப்புச் செலவினம் இவ்வாண்டு 15. 3 மில்லியனாக அதிகரித்துள்ளது.

இவ் அதிகரிப்பினால் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது எனவும் இத்தகைய அதிகரிப்பு இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு தாங்க முடியாத ஓர் சுமையாகவே இருக்கும் எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமல் போனவர் பற்றி 3500 முறைப்பாடுகள் பதிவு

(மட்டக்களப்பு)

காணாமல் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு சிறிலங்கா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மனித உரிமைகள்மீறல்கள் சம்பந்தமான ஆணைக்குழு அண்மையில் மட்டக்களப்புக்கு திடீர் விசயமொன்றை மேற்கொண்டது.

1990 யூன் மாதத்திற்குப் பின்னர்காணாமல்போனமூவாயிரத்து ஐந்நூறு பேர் பற்றிய முறைப்பாடுகள் அப்போது பதிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

## வெளிவாரிக் கற்கைநெறிப் பதிவுகள் 1991/92 கல்வியாண்டு

கலை முதற் கற்கை நெறி — (First in Arts)
வர்த்தக முதற்கற்கை நெறி — (First in Commerce)
வணிகமாணி பகுதி 1 — (Bachelor of Commerce-part 1)
பொதுக் கலைமாணி பகுதி 1 — (Bachelor of Arts - - General Part 1)
சிறப்புக் கலைமாணி பகுதி 1 — (Bachelor of Arts - -Special Part 1)

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு வெளிவாரி மாணவர்களாக பதிவு செய்ய கொடுக்கப்பட்ட காலம் 06-06-92 இல் இருந்து 04-07-92 வரை நீடிக்கப்பட்டு உள்ளது.

[சி / 4511]

பதிவாளர்

## கப்டன் விஜியின் 1-ம் ஆண்டு நிறைவில் எமது விழிகள் சிந்தும் கண்ணீர் அஞ்சலி

தாய் மடியில்: 10 — 04 — 1965



தமிழீழ மண்ணில் 18 — 06 — 1991

கந்தையா சிவஞானசம்பலவம் (விஜி)
(சாமிப்புலம் பூநகரி)
திதி: 07 - 06 - 92

ஆண்டது எண்பதி தாறதில்
துடிதுடித்த உன் கரமதில்
துப்பாக்கி ஏந்தி நின்றாய்
சிங்களப் படைகளை சிதறடிக்க
செருக்களம் பல சென்றாய்
வெற்றியோடு வீறுநடை போட்டாய்
ஐந்து ஆண்டுகளில் அழியாத
சரித்திரம் படைத்து நின்றாய்
சிலாபத்துறையில் சிறிநின்று போர்செய்தாய்
ஆண்டு தொண்ணூற் றொன்றில்
ஆறாத் துயரில் எமைவிட்டு
அரக்கர் குண்டை அரவணைத் தாயோ

அம்மா, அண்ணன்மார், அக்காமார்,
தங்கை, மச்சான்மார்,
மைத்துனர், மருமக்கள்.

சாமிப்புலம்,
பூநகரி.

[2642]

...யிலும், திங்கட்கிழமை (8 6-92) வடமராட்சிப் பகுதியிலும் நடைபெறவுள்ளது.

வடமராட்சியில் தென்மேற்கு பிரதேசசபை வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்கு உட்பட்ட நகர சபைப் பகுதிகளில் நடைபெறும். காலை 10.00 மணிக்கு நெல்லியடி பொது நூலகத்திலும், 11.00 மணிக்கு வல்வெட்டித்துறையிலும் நடைபெறவுள்ளது.

தென்மராட்சியில் காலை 9.00 மணிக்கு கைதடி முத்துக்குமாரசாமிமகாவித்தியாலயத்திலும்,10.00மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும், 11.00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இச் சந்திப்பில் செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனியும் கலந்து கொள்வார்.

## பாராட்டுவைபவம்

(வடமராட்சி கிழக்கு)

உடுத்துறை மகாவித்தியாலயத்திலிருந்து, பரீட்சைக்குத் தோன்றி பல்கலைக்கழக புகுமுகத்திற்குத் தகுதி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு வைபவம் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திரு. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் வடமராட்சி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு'எஸ். செல்லத்துரை உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் திரு. என். ஏகாம்பரநாதன், திரு எஸ். செல்வரட்ணம், கடற்புலிகளின் யாழ்மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு மறவன், உடுத்துறை கொத்தணி கல்வி வளர்ச்சிக்கழக உபதலைவர் திரு. எஸ் தியாகராசா, கிராம சேவையாளர் திரு. யோசப், ஆசிரியர் திரு அ.கா. அரியகுமார் ஆகியோர் கலந்துகொண்டு பாராட்டுரை நிகழ்த்தினர். ஆசிரியர் திரு. தியாகலிங்கம் நன்றி தெரிவித்து உரையாற்றினார். [36]

## மரம் நடுகைக்கு ஊக்குவிப்பு

வரும் மழைக்காலத்தில் மர நடுகையை ஊக்குவிப்பதை மையமாகக் கொண்டு நாற்று மேடை அமைக்கவும் அவற்றைப் பராமரிக்கவும் அது தொடர்பான நடவடிக்கைகளை திட்டமிடவும், செயலாக்கவுமென செயலக மட்ட அமைப்பு ஒன்றினை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட கூட்டம் எதிர்வரும் வியாழனன்று காலை பத்து மணியளவில் யாழ். அரசாங்க அதிபர் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

**ஈரோராஜ்** (குலசேகரன் கெங்காதரன் - புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.)

**தீசன்** (சின்னத்துரை மனோகரன் - மல்லாகம்)

**குட்டித்தம்பா** (சண்முகரத்தினம் கணேசானந்தன்- சுளிபுரம்)

**சசி | வன்னி** (இராசரத்தினம் சசீந்திரன் - அரியாலை)

இதேசம்பவத்தின்போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட - 4 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

★ **பதுர்த்தீன் | குஞ்சான்** (சாலித்தம்பி ஆதம்பாவா - அக்கரைப்பற்று, அம்பாறை.)

★ **சைமன்** (நா. கிருபைராசா - அக்கரைப்பற்று, அம்பாறை.)

காங்கேசன்துறையில் 'ஹாபர்வியூ' முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

★ **கரிகாலன்** (மாரிமுத்து சிவானந்தம் - தம்பலகமம், திருக்கோணமலை.)

★ **மோகன்** (கமலநாதன் ஜெயகணேஸ் - மல்லாகம்)

13 - வது நாளாக சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட 'ஒப்பறேசன் லிபறேசன்' நடவடிக்கையின் போது கீரிமலைப் பகுதியில் வைத்துக் காணாமல் போன -

★ **முருகு** (சு. முருகதாஸ் - காரைநகர்)

இதே நடவடிக்கையின்போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட இளைப்பாறிய தலைமை ஆசிரியர்.

மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட - 3 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு வவுனியா செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**கமால்** (மட்டக்களப்பு)

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு தரவைப் பகுதியில் மாடு தாக்கியதில் எமைப் பிரிந்த -

**ரதன்** (கணபதிப்பிள்ளை சிறிகரன் - புன்னைச்சோலை மட்டக்களப்பு.)

மன்னார் சிலாபத்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**பவான்** (துரைசிங்கம் திவாகரன் - அளவெட்டி)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது கொல்லப்பட்ட கடற்றொழிலாளியான தமிழ் இளைஞன்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4519)

நல்லூர் இனை நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

குழந்தை இறந்து பிறப்பினும், தசைப் பிண்டம் பிறப்பினும் வாளால் வெட்டி வீர அடக்கம் செய்யும் மரபினை உடையோர் மன வலிமையின்றி கட்டுண்டு இழுக்கப்படும் நாய்போல வயிற்றுக்காக இரந்து உண்ணும் வாரிசுகளைப் பெற்றெடுப்பரோ.

— புறநானூறு - 74

ஈழநாதம்

61, [illegible] வீதி, யாழ்ப்பாணம் 07-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# அன்றுமுதல் இன்றுவரை துரோகத்தனம்

தற்பொழுது கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கு தமது அரசியலின் எதிர்காலம் பற்றிப் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. இராணுவ நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படும் அதேவேளை பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம், வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு அரசியல் தீர்வை சிறிலங்கா அரசாங்கம் தங்கத் தாம்பாளத்தில் வைத்து நீட்டும், தாம் வடக்கு கிழக்கின் ஆட்சியாளராகப் பவனி வரலாம் என எண்ணியவர்களுக்கு சிங்களப் பேரினவாதம் தனது ''வழமையான நடவடிக்கை'' மூலம் பதிலடி கொடுத்துள்ளது.

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்திற்கு பௌத்த பேரினவாத சக்திகளிடம் இருந்து எழுந்த எதிர்ப்பானது கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கு ஓர் பலத்த அடியாக இருப்பினும் விடுதலைப் புலிகளுடன் பேசி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற அமைச்சர் தொண்டமானின் யதார்த்த பூர்வமான நிலைப்பாடு கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை ஆகையால் பௌத்த பேரினவாதத்தால் எழுந்த அச்சுறுத்தலைக்காணாததுபோல் இருந்து விட்டன ஆனால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை சிறிலங்கா சுதந்திரக் கட்சி பகிஷ்கரிப்பதென எடுத்த முடிவானது கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்குப் பெரும் அதிர்ச்சியையும், தமது நிர்க்கதியான நிலை பற்றியும் பெரும் கவலையையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் தமிழரின் தேசிய உணர்வையும், விடுதலைப் புலிகளையும் சிங்கள தேசத்திற்கு எதிரானவர்கள் எனக் காட்டி அரசியலில் லாபம் தேட இக்குழுவினர் முற்பட்டுள்ளனர்.

''சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் புறக்கணிக்குமேயானால் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சரியானதென்று ஏற்று தமக்கென ஒரு தனிநாட்டை நிறுவிக் கொள்ள தமிழ்மக்கள் முற்படுவது தவிர்க்க முடியாதது.'' இவ்வாறு கொழும்பிலுள்ள ஈரோஸ் இயக்கப் பிரமுகர் சங்கர் ராஜி தெரிவித்துள்ளார்.

''எல்லாத் தமிழர்களையும், விடுதலைப் புலிகளையும் தனி நாட்டையும் நோக்கித் தள்ளிவிடும்'' எனத் தமிழர் விடுதலைக் கூட்டணி முட்டுக்களைப்பு எம். பி.

# காபூலில் புதிதாக வெடித்துள்ள மோதல்கள்

முஜாஹுதீன் கெரில்லாக்களுக்கு இடையில் கடந்த வாரப் பிற்பகுதியில் ஏற்பட்ட மோதல் ஒரு புதிய கட்டத்தை எட்டியுள்ளது சுமார் இரு வாரங்களுக்கும்மேலாகநீடித்த அமைதியானது கடந்த ஞாயிறன்று மீண்டும் ஒலித்த ஆட்டிலறி மற்றும் றொக்கட் வேட்டுக்களின் மூலம்குலைந்து போயிற்று எனலாம். இந்த வேட்டுச்சத்தங்கள் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலுக்குப் புதியவை அல்ல என்றாலும் தற்போது மீண்டும் சண்டைகள் ஆரம்பிக்கப்பட்டதன் குறியீடுளாக இவை அமைந்து விட்டன.

இப்பத்துல்லா முஜாகுதீன் தலைமையிலான இடைக்கால அரசை ஆதரிக்கும் ஜெனரல் தோசிமின் தலைமையிலான உஸ்பெக் இராணுவத்தினருக்கும்,குல்புதின் கேக் மத்தியார் தலைமையிலான கிஸ்தே இஸ்லாமி படையினருக்கும் இடையேதான் தற்போது மோதல்கள் தீவிரமாகியுள்ளது. இந்த மோதல்களை முடிவுக்கு கொண்டுவர தற்போதைய பாதுகாப்பு அமைச்சர் எம்ஏச். ஷா மசூத்திற்கும் குல்புதின் கேக் மத்தியாருக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடு அமுலாக்குவதில் இக்கட்டான நிலைமை தோன்றியுள்ளது.

இந்த உடன்பாட்டின் முக்கிய அம்சமாக இருப்பது ஜெனரல் தோசிமின் தலைமையிலான உஸ்பெக் இராணுவத்தினர் காபூலிலிருந்து மீளப் பெறப்பட்டு அதற்குப்பதிலாக வேறு முஜாகிதீன் குழுக்களையும் சேர்ந்தவர்களைக் கொண்ட இராணுவத்தினால் அந்தஇடம் நிரப்பப்பட வேண்டும்என்பதாகும் இது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்வதற்கென பாதுகாப்பு அமைச்சர் மசூத் சில கட்டளைகளைப் பிறப்பித்திருந்தபோதிலும் இதனை அமுல்படுத்திட இயலவில்லை.

இதற்கான பிரதான காரணங்களில் ஒன்று இடைக்கால அதிபரான இப்பத்துல்லா முஜாகுதீன் இந்த உடன்படிக்கையைப் பகிரங்கமாக கண்டனம் செய்தமையாகும். அத்துடன் உஸ்பெக் இராணுவத்தினர் காபூலிலிருந்து வெளியேறக்கூடாது எனவும் அவர் கூறியுள்ளார் அதிபர் முஜாகுதீனின் இந்த நடவடிக்கை குல்புதின் கேக் மத்தியாருக்கு ஏற்புடையதல்ல என்பது தெளிவு பாகிஸ்தானிலிருந்து திரும்பி வந்தபோது காபூல் விமான நிலையத்தில் இடைக்கால அதிபர் முஜாகுதீன் பயணம்செய்த விமானம் எறிகணை வீச்சுக்கு இலக்கான சம்பவத்திற்கு குல்புதின் கேக் மத்தியார் குழுவினரே காரணம் எனக் கூறும் அதிபர் முஜாகுதீன் அது தன்னையும், தனது ஆட்சியையும் கொல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதி என்றே கருதுகின்றார்.

> நஜிபுல்லா அரசாங்கத்தின் வீழ்ச்சியை அடுத்து ஆப்கானிஸ்தானில் ஆட்சியை அமைக்க முஜாகுதீன் கிளர்ச்சிக் குழுக்களிடையே மோதல்கள் இடம் பெறத் தொடங்கியுள்ளன. இந்த மோதல்கள் பற்றி இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையின் அரசியல் விமர்சகர் எம். கே. திக்கல் எழுதிய விமர்சனக் குறிப்பின் மொழியாக்கம்.

இதே வேளை ஆப்கான் நிலைமை தொடர்பாக உன்னிப்பாக அவதானம் செலுத்தும் எவரும், இடைக்கால அதிபர் முஜாகுதீனுக்கும், உஸ்பெக் இராணுவத்தளபதி றசீத்தோசிம்மிற்கும் இடையே ஏற்பட்டிருக்கும் புதிய நெருக்கம் பற்றி அவதானிக்காமலிருக்க முடியாது. பதவியேற்றது முதல் தோசிம்மை கௌரவப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வந்த முஜாகுதீன் இறுதியில் அவரை ஒரு முழு ஜெனரலாகப் பதவியுயர்த்தியுள்ளார்.

முஜாகுதீன்- தோசிம் கூட்டு தற்போதைய அதிகாரக்கை மாற்றலில் முக்கிய பங்கு வகித்து வருவதையும் காணமுடிகின்றது.

இந்த நிலைமையை மேலும் சிக்கலாக்கும் விதமாக ஏனைய சக்திகள் சிலவும் தமக்கிடையிலான மோதல்களைத் தீவிரமாக்கியுள்ளன. ஹிஸ்தே வகாபாத் குழுவினர்களும், இஸ்தே காதே இஸ்லாமி குழுவினர்களும் தமக்கிடையிலான மோதல்களில் பகிரங்கமாக இறங்கியுள்ளனர். இந்தமோதல்களில் இருபது பேர் கொல்லப்பட்டதுடன் மற்றும் பலர் படுகாயமடைந்துள்ளனர் இதனையடுத்து இருதரப்பிலும் மாறி மாறி ஆட்கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றன. ஹிஸ்தே வகாபாத் குழுவினர்களுக்கு ஈரானின் ஆதரவு இருக்கும் அதே சமயம் இஸ்தே காதே இஸ்லாமிய குழுவினர்களுக்கு சவூதி அரேபியாவின் ஆதரவு இருக்கின்றது. இந்த முரண்பாடுகள் நம்பிக்கை விசுவாசத்தின் அடிப்படையில் வளர்ந்து செல்ல வெளிச் சக்திகளின் தூண்டுதலின் பேரில் ஆப்கான் மக்கள் இரத்தம் சிந்த வேண்டிய நிலை தொடர்கின்றது.

இவை அனைத்தையும் ஒருங்கு சேரக் கவனித்துப் பார்த்தால் ஆப்கானிஸ்தான் அமைதி வெகு அண்மையில் ஏற்படும் என்று எதிர்வு கூற முடியாது என்பது தெளிவு.

## இந்திய ஜனாதிபதி தேர்தலில்

# தாழ்த்தப்பட்டவர் சமூக பிரதிநிதி ஜனதா தள் சார்பாக நிறுத்தப்படவேண்டும்

### - இல்லையேல் பதவி துறப்பேன் வி. பி. சிங் அறிவிப்பு

[டில்லி]

இந்தியாவின் ஜனாதிபதி பதவி அல்லது உப ஜனாதிபதி பதவிக்கு தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தமது கட்சியின் சார்பாக நிறுத்தப்படாவிட்டால் தான் பதவி துறக்கப்போவதாக முன்னாள் பிரதமரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வி பி சிங் கூறியுள்ளார்

ஜனதா தளம் என்னும் தமது கட்சியின் சார்பாக இத்தகைய ஒரு வேட்பாளருக்கே ஆதரவு நல்கப்பட வேண்டும் என்றும், இதன் மூலம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி, மலைவாழ் ஆதிவாசி மக்கள் நாட்டின் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து கௌரவிக்கப்பட வழியேற்படும் என்றும் அவர் புதுடில்லியில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார். அவ்வாறு இல்லாத இடத்து தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்யப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

# இந்திய-அமெரிக்ககடற்படை கூட்டுப் பயிற்சி தொடரும்

(டில்லி)

1993 ஆம் ஆண்டு முற்பகுதியில் அல்லது இவ்வாண்டின் இறுதிப் பகுதியில் அதி நுட்பமான கூட்டுக் கடற்படைப் பயிற்சிகளை நடத்துவதற்கு இந்தியாவும், அமெரிக்காவும் உத்தேசித்துள்ளன. இதனை இந்தியக் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரியான வைஸ் அட்மிரல் பி. குஹா அண்மையில் புதுடில்லியில் செய்தியாளரிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் மலபார் 92 என்ற பெயரில்

# அரசியல் எதிராளிகள் மீது பாகிஸ்தான் தொல்லை

### -பொது மன்னிப்பு ஸ்தாபனம் குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில், சிந்துமாகாணத்தில் உள்ள அரசியல் எதிராளிகளை பரவலாக பல வகையிலும் கொடுமைப்படுத்தி சித்திரவதைப்படுத்தி வருவது, சட்டவிரோதமாக காவலில் பிடித்து வைத்திருப்பது மற்றும் பொலிஸார் மூலம் அவர்களை கைது செய்வது போன்ற வழி முறைகளினால் பாகிஸ்தானிய அரசு அரசியல் எதிராளிகளுக்கு தொல்லை கொடுத்து வருவதாக சர்வதேச பொது மன்னிப்பு ஸ்தாபனம் பாகிஸ்தான் மீது குற்றம் காட்டியுள்ளது.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பெனாஸிர் அரசு வீழ்ச்சி அடைந்ததின் பின்னால் அன்று தொடக்கம் சட்டவிரோதமாககைதுசெய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் மக்கள்கட்சித் தொண்டர்கள் 600 பேர்களின் பெயர்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் உண்மையில் கைதானோரின் எண்ணிக்கை பல்லாயிரக்கணக்காகும் என்றும் நேற்று முன்தினம் லாகூரில் பாகிஸ்தான் மனித உரிமைகள் கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## ஊழல் குற்றச்சாட்டில்

ரக் கட்சிபகிஷ்கரிப்பதென எடுத்த முடிவானது கொழும் பிலுள்ளதமிழ்க் குழுக்களுக்குப் பெரும் அதிர்ச்சியை யும், தமதுநிர்க்கதியான நிலை பற்றியும் பெரும் கவலை யையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் தமிழரின் தேசிய உணர்வையும், விடுதலைப் புலிகளையும் சிங்கள தேசத்திற்கு எதிரா னவர்கள் எனக் காட்டி அரசியலில் லாபம் தேட இக் குழுவினர் முற்பட்டுள்ளனர்.

''சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் பாரா ளுமன்றத் தெரிவுக் குழுவைப் புறக்கணிக்குமேயானால் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சரியானதென்று ஏற்று தமக்கென ஒரு தனிநாட்டை நிறுவிக் கொள்ள தமிழ்மக்கள் முற்படுவது தவிர்க்க முடியாதது.'' இவ் வாறு கொழும்பிலுள்ள ஈரோஸ் இயக்கப் பிரமுகர் சங்கர் ராஜி தெரிவித்துள்ளார்.

''எல்லாத் தமிழர்களையும், விடுதலைப் புலிகளை யும் தனி நாட்டையும் நோக்கித் தள்ளிவிடும்'' எனத் தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பு எம். பி. யான ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக தமிழீழம் உருவாகிவிடும். விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சரியாகி விடும் எனக் கூக்குரல் இடுவதன் மூலம் சிங்களப் பேரினவாதத்தைத் தூண்டி தமிழரின் நியாயபூர்வமான கோரிக்கைகளை மழுங்க டிக்கச் செய்து தமிழரின் தேசிய இனப்போராட்டத்தை எந்த விதத்திலாவது தோற்கடிக்கு மாறும், மழுங்கடிக் குமாறும் இத் தமிழ்க் குழுக்கள் கூக்குரல் இடுகின்றன.

இத்தமிழ் குழுக்கள் இன்று மாத்திரமல்ல, என் றுமே தமிழரின் போராட்டத்திற்கு எதிரானவையாக தமிழ் தேசிய இனப் போராட்டத்தை மழுங்கடிக்கும், தோற்கடிக்கும் சக்திகளாகவே செயற்பட்டன.

இக்குழுக்கள் யாவும் தமிழருக்கு ஒரு தனியரசு உருவாக வேண்டும் என்ற அடிப்படையிலேயே ஆரம்பிக் கப்பட்டன. இதன் அடிப்படையிலேயே ஆயிரக்கணக் கான இளைஞர்களையும் போராட்டத்தில் சேர்த்துக் கொண்டன. இளைஞர்களும் அதனை நம்பியே சேர்ந்து கொண்டனர். ஆனால், இக்குழுக்கள் எப்பொழுதுமே தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு விசுவாசமாக இருக்கவில்லை. ஆனால், 1985ஆம் ஆண்டில் நடந்த திம்பு பேச்சுக்கள் வரையும் இக்கோரிக்கையை வெளிப்ப டையாக வாயினும் வற்புறுத்தி வந்தனர். ஆயினும் அதில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கவில்லை.

இதேவேளை, இக்குழுக்கள் தமிழர் போராட் டத்தை காட்டிக் கொடுத்தே தமது அரசியலை நடத்த முற்பட்டன. ஆரம்பத்தில் ஏகாதிபத்திய நோக்கம் கொண்ட இந்தியாவிடம் தமிழர் போராட்டத்தை காட்டிக் கொடுத்தன. தற்பொழுது பேரினவாத பௌத்த சிங்கள அரசாங்கத்திடம் தமிழர் தேசிய போராட்டத்தை காட்டிக் கொடுப்பதில் போட்டி போடுகின்றன. எப்பொழுது எவருக்காயினும் ஏவல் செய்வதே நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

தனி அரசொன்றை உருவாக்குவதாகவும், அதற் குத் தலைமை தாங்கப் போவதாகவும் இளைஞர்களை அன்று அணிதிரட்டியவர்கள் இன்று ஐக்கிய இலங்கைக் காகவும், பேரினவாதத் தலைமைக்காகவும் போராடப் போவதாகவும் பிரகடனப்படுத்தும் அளவிற்கு தமது துரோகத்தனத்தை வெளிக்காட்டியுள்ளனர். தமிழர் உரிமைக்காகப் போராடுவது தவறானது, சிங்கள தேசத்திற்கு ஆபத்தானது எனக்கூறும் இவர்கள், இன்னும் தம்மை தமிழ் மக்களின் தலைவர்கள் எனக் கூறிக் கொள்ள முற்படுவது வேடிக்கையாவும் உள்ளது.

---

[டில்லி]

இந்தியாவின் ஜனாதிபதி பதவி அல்லது உப ஜனாதிபதி பதவிக்கு தாழ்த்தப்பட்ட அல் லது பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தமது கட்சி யின் சார்பாக நிறுத்தப்படா விட்டால் தான் பதவி துறக் கப் போவதாக முன்னாள் பிர தமரும் நாடாளுமன்ற உறுப்பி னருமான வி.பி. சிங் கூறியுள் ளார்.

ஜனதா தளம் என்னும் தமது கட்சியின் சார்பாக இத் தகைய ஒரு வேட்பாளருக்கே ஆதரவு நல்கப்பட வேண்டும் என்றும், இதன் மூலம் தாழ்த் தப்பட்ட மற்றும் பழங்குடி, மலைவாழ் ஆதிவாசி மக்கள் நாட்டின் உயர்ந்த ஸ்தானத் தில் வைத்து கௌரவிக்கப்பட வழியேற்படும் என்றும் அவர் புதுடில்லியில் வெளியிட்ட அறி க்கை ஒன்றில் கூறியுள்ளார்.

## வி. பி. சிங் அறிவிப்பு

அவ்வாறு இல்லாத இடத்து தமது நாடாளுமன்ற உறுப்பி னர் பதவியை இராஜினாமாச் செய்யப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

## இந்திய-அமெரிக்ககடற்படை கூட்டுப் பயிற்சி தொடரும்

(டில்லி)

1993 ஆம் ஆண்டு முற்பகு தியில் அல்லது இவ் வாண் டின் இறுதிப் பகுதியில் அதி நுட்பமான கூட்டுக் கடற்படைப் பயிற்சிகளை நடத்துவதற்கு இந்தியாவும், அமெரிக்காவும் உத்தேசித்துள் ளன. இதனை இந்தியக் கடற் படையின் சிரேஷ்ட அதிகாரி யான வைஸ் அட்மிரல் பி. குஹா அண்மையில் புதுடில்லி யில் செய்தியாளரிடம் பேசு கையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் மலிபார் 92 என்ற பெயரில் அண்மையில் நடத்தப்பட்ட கூட்டுக் கடற்படைப் பயிற்சி கள் மிகத் திருப்திகரமானவை என்று வர்ணித்தார். அத்து டன் ஹெலிகப்டர்கள் இந்தக் கூட்டுக் கடற்படைப் பயிற்சி யின் போது மிக முக்கிய அம் சமாக இருந்தது என்றும் தெரி வித்தார்.

மேலும் இவ் வருடத்தில் நடைபெறவிருக்கும் இந்திய - அமெரிக்க கடற்படை செயல் கமிட்டியின் கூட்டத்தில் அடு த்த கூட்டுக் கடற்படைப் பயிற்சிக்கான தேதி பற்றி முடிவு செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்.

## ஊழல் குற்றச்சாட்டில் ஹட்சந்த் மேத்தா கைது

(டில்லி]

இந்தியாவின் மிகப்பெரும் பங்குச் சந்தை ஊழல் என வர்ணிக்கப்படும் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதான குற்றச் சாட்டின் கீழ் ஹட்சந்த் மேத்தா அவரது சகோதரர் அர்ஜுன் மேத்தாவும் மற்றும் அவரது சகாக்களான மூன்று வங்கி அதிகாரிகளும் விசார ணைக்காக சி. பி. ஐயினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வங்கி அதிகாரிகளில் இருவர் பாரத ஸ்டேட் வங்கியையும் ஒருவர் தேசிய வீடமைப்பு வங்கியை யும் சேர்ந்தவராவார்.

## மூத்த உறுப்பினர் மூவரை அ.இ.அ.தி.மு.க நீக்கியது

[சென்னை]

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தின் மூத்த உறுப்பினர்கள் மூன்று பேர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக கட்சி யின் பொதுச் செயலாளரும் தமிழக முதல்வருமான ஜெய லலிதா அறிவித்துள்ளார்.

கட்சியின் ஒழுக்க விதிகளை மீறியமைக்காக கோவைத் தம்பி, சைதை துரைச்சாமி, மதுரை கே. ராமச்சந்திரன் ஆகியோர் உறுப்பினர் தகுதி யிலிருந்து நீக்கப்பட்டிருப்ப தாக ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள் ளார்.

## 'அக்னி' சோதனை பற்றி மொஸ்கோ விசனம்

(மொஸ்கோ)

இந்தியா அண்மையில் நடத் திய நடுத்தர வீச்சு ஏவுகணை பரிசோதனை தொடர்பாக புதனன்று மிகவும் எச்சரிப் பான விசனத்தை ரஷ்யா வெளியிட்டுள்ளது அதேவேளை 'அக்னி' ராக்கட்டுகள் இரா ணுவ நோக்கங்களுக்குப் பயன் படுத்தப்பட மாட்டாதென்று நம்புவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை செய்மதி ஒன்றை விண்ணுக்கு அனுப் பிய விண்வெளி ஆராய்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியே இந்த ''அக்னி'' ஏவுகணைப் பரீட்சை என்று வலியுறுத்திக் கூறியுள்ள இந்தியா இராணுவ ரீதியான ஆயுதங்களைத் தயாரிக்கும் நோக்கமுடை யது அல்ல என்றும் மறுதலித் துள்ளது.

ஏவுகணை தொழில் நுட் பம் பரவுவது தொடர்பாக கவலை கொண்டிருக்கும் அமெரிக்கா 'அக்னி' பரீட்சிக் கப்பட்டதையும் கண்டித்திருப் பது தெரிந்ததே

---

## தி.மு.க.பேச்சாளர் தாக்கப்பட்டார்

[மதுரை]

தி.மு.க.வின் பிரபல மேடைப் பேச்சாளரான தீப் பொறி ஆறுமுகம் குண்டர்க ளால் தாக்கப்பட்டு மதுரை ராஜாஜி மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்ப ட்டுள்ளார்.

பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட பின்னர் றிக்ஷாவில் வீடு நோக்கி திரு ம்பிக் கொண்டிருக்கையில் இடை மறிக்கப்பட்டு குண்ட ர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

## ... மீது பாகிஸ்தான் தொல்லை

### -பொது மன்னிப்பு ஸ்தாபனம் குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில், சிந்துமாகா ணத்தில் உள்ள அரசியல் எதி ராளிகளை பரவலாக பல வகையிலும் கொடுமைப்படு த்தி சித்திரவதைப்படுத்தி வரு வது, சட்டவிரோதமாக காவ லில் பிடித்து வைத்திருப்பது மற்றும் பொலிஸார் மூலம் அவர்களை கைது செய்வது போன்ற வழி முறைகளினால் பாகிஸ்தானிய அரசு அரசியல் எதிராளிகளுக்கு தொல்லை கொடுத்து வருவதாக சர்வ தேச பொது மன்னிப்பு ஸ்தாப னம் பாகிஸ்தான் மீது குற்றம் காட்டியுள்ளது.

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பெனாஸிர் அரசு வீழ் ச்சி அடைந்ததின் பின்னால் அன்று தொடக்கம் சட்ட விரோதமாககைதுசெய்யப்பட் டுள்ள பாகிஸ்தான் மக்கள்கட் சித் தொண்டர்கள் 600 பேர்க ளின் பெயர்கள் சேகரிக்கப்பட் டுள்ளதாகவும் ஆனால் உண் மையில் கைதானோரின் எண் ணிக்கை பல்லாயிரக்கணக்கா கும் என்றும் நேற்று முன்தி னம் லாகூரில் பாகிஸ்தான் மனித உரிமைகள் கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## இஸ்ரேல் பிரதமரை சந்திக்க பாலஸ்தீன இயக்கம் தயார்

### யாஸீர் அரபாத்

(பரிஸ்)

நடு நிலை பிரதேச மென் றில் சர்வதேச ஆதரவுடனான ஏற்பாடொன்றின்கீழ் இஸ்ரே லியப் பிரதமர் எர்ஷாத் ஷமீ ரை சந்திப்பதற்கு தாம் தயா ராக இருப்பதாக பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஷீத்அரபாத்கூறியதாக அவ ரை மேற்கோள் காட்டி பிரா ன்ஸ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

இதேவேளை இஸ்ரேலின் மனப்போக்கு காரணமாக மே ற்காசிய சமாதான பேச்சுவா ர்த்தைகள் வெற்றி பெறும்வா ய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக தமக்கு தோன்றவில்லை என வும் யாஸீர் அரபாத் தெரிவித் துள்ளார்.

## ஜனநாயக கட்சி சார்பில் பில்கிளின்டன் போட்டி

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த திரு. பில் கிளின்டனுக்கு குறைந்தது மூன்று மாநிலங்களில் வெற்றி வாய்ப்புக்கள் இருப்பதாக நிர் ணயிக்கப்பட்டதனை அடுத்து அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக போட்டியிடும் வாய்ப்பை அவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

நடைபெற இருக்கும் அதிபர் தேர்தலில் ஜோர்ஜ் புஷ், றோஸ் பெட்ரோக், றோஸ் பெரோ ஆகியோருடன் சேர் ந்து பில்கிளின்டனும் வேட்பா ளராக போட்டியிடலாம் என வும் எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் வாக்குப் பதிவு முடிவடைந்த பின்னால் அலபாமா, ஒகய்யோ, நியூ ஜெஸ்ஸி ஆகியவற்றில் புஷ் ஷும் கிளின்டனும் வெற்றி பெற்றிருப்பதாகவும் முக்கிய மான பூர்வாங்க போட்டிக ளின் கடைசிச் சுற்றில் முன்ன ளைய ஆளுநர் ஜெரி பிறவுனு க்கு எதிரான போட்டியிலும் பில் கிளின்டன் வேறு இரண்டு மாநிலங்களிலும் வெற்றிபெற லாம் என எதிர்பார்க்கப்படுகி றது.

## மனிதர்களை விடவும் தாவரங்கள்,மிருகங்கள்பற்றி மேற்குலகம் அக்கறை

### -பாக் குற்றச்சாட்டு

மேற்குலக நாடுகள் மனித வர்க்கத்தைப்பற்றி ஆலோசிப் பதை விடுத்து மிருகங்களிலும் தாவரங்களிலும் கூடியகவனத் தைச் செலுத்துகின்றன என சூழல் சம்பந்த புவி உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய பாகிஸ்தான் பிரதிநிதி அன்வர் சைபுல்லாஹ்கான் தெரிவித்தார்

அவர் மேலும் பேசுகையில் கோடிக்கணக்கான மக்கள் அழுக்குடன் வாழும் போது உலகத்தில் எல்லாம் சுபமாக நடைபெறுகிறதென புவி மாசு பற்றி மாத்திரம் கவனம் செலுத்துவது பயனளிக்காது

மேலும் புவியில் குறிப்பிட் டளவு காணப்படும் வளங் களை துஷ்பிரயோகம் செய் வதை செல்வந்த நாடுகள் கைவிட வேண்டும். வறிய நாடு களுக்கு செல்வந்த நாடுகள் உதவி அளிக்காவிட்டால் சூழலை பாதுகாக்கும் பணி யில் ஈடுபட முடியாது.

சனத்தொகையில் 20 வீதத் தினர் 80 வீத வளங்களை அனுபவித்து 75 வீத சூழலை மாசுபடுத்தும் கொள்கையை கைவிட்டு வீணாக்கல், அளவு கடந்த பாவனையை கட்டுப் படுத்தல் ஆகியவற்றைகட்டுப் படுத்தாது சூழல் பாதுகாப்பு பற்றி போடும் கூப்பாடு பலன ளிக்காது எனவும் அறிவித் தார்.

ஈழநாதம்

# தடுப்புக் காவலில் இருக்கும் நிரபராதிகள் விடுதலையாவர்

[கொழும்பு]

தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளவர்கள் விசாரணை செய்யப்பட்டு நிரபராதிகள் எனக் காணப்படும் பட்சத்தில் அவர்கள் விடுவிக்கப்படுவர். தடுப்பு முகாம்களில் இருக்கும் சந்தேக நபர்கள் தொடர்பான விபரங்களை சேகரித்து உறவினர்களுக்கு அவர்கள் பற்றிய தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மனித உரிமை மீறல்கள் குழுவின் தலைவர் எஸ் சொய்ஸா மட்டக்களப்பு கத்தோலிக்க சமூக மண்டபத்தில் திரண்டிருந்த சுமார் 3000 தாய்மார்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

சுமார் 3000 க்கும் அதிகமான பெண்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை கண்ணீர் மல்க திரு சொய்ஸா முன் எடுத்துரைத்தனர்.

இவர்களின் முறைப்பாடுகளை ஆராய்ந்த பின்னர் அவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இதுவரை பல தடுப்பு முகாம்களுக்கு சென்றுள்ளதாகவும் அங்குள்ள சுமார் 6000 பேரைச் சந்தித்துள்ளதாகவும் கொழும்பு மகஸீன் சிறையில் இருந்து களுத்துறைக்கு மாற்றப்பட்டவர்களுக்கு வெகுவிரைவில் விசாரணைகள் நடாத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மட்டு நகரில் உள்ள தடுப்பு முகாம்களை சென்று பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக மட்டக்களப்பு சமாதானக் குழுவினரை சந்தித்து சொய்ஸா உரையாடினார்.

இச்சந்திப்பின் போது 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு பின்னர் கிழக்கு பல்கலைக்கழக அகதிமுகாம் சித்தாண்டி முருகன் ஆலய அகதி முகாம் உட்பட பல இடங்களில் காணாமல் போனோரை கண்டறிய உதவுமாறும் அவர்களுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுக்க ஆவன செய்யுமாறும் சமாதானக்குழுவினர் கேட்டுக்கொண்டனர்.

## வயோதிபர் தற்கொலை

(புங்குடுதீவு)

புங்குடுதீவைச்சேர்ந்த வயோதிபர் ஒருவர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார். புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐ குணரெத்தினம் (வயது 65) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தற்கொலை புரிந்தவராவர். இடம்பெயர்ந்து குடும்பத்தினருடன் யாழ். கொட்டடிப் பகுதியில் வசித்து வந்த இவர் 'கான்சர்' நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்றும், அதன் உபாதை தாங்கமுடியாமலேயே நேற்று அதிகாலை சுருக்கிட்டுத் தற்கொலை செய்தார் என்றும் கூறப்படுகின்றது.

## வெட்டுப்புள்ளி அனுப்பவில்லை

(யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. உயர்தர விசேட பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளி இதுவரை அனுப்பிவைக்கப்படவில்லை.

இப்புள்ளிகளை அனுப்பிவைப்பதற்குப் பல்கலைக்கழகங்களில் உள்ள வெற்றிடங்கள் பற்றிய விபரங்கள் இதுவரை கணிப்பிடப்படாமையே காரணம் எனத் தெரியவருகிறது. (பா)

## பெ. தோட்ட நிர்வாகத்திற்கு மாதாந்தம் 40கோடி வீண்

### -காமினி அத்துகோறள

[கொழும்பு]

அரச பெருந்தோட்டங்களின் முகாமைத்துவத்திற்காக தற்போது 40கோடி ரூபாவை மாதாந்தம் ஒதுக்கீடு செய்கின்றது இதுஅரசபெருந்தோட்ட கூட்டுஸ்தாபனம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் திறமையற்ற நிர்வாகத்தின் கீழ் இத்தொகை விரயமாக்கப்படுகிறது. எனவே அரச பெருந்தோட்ட நிர்வாகத்தை தனியாரிடம் ஒப்படைப்பதனால் விரயமாக்கப்படும் இத்தொகையை நாட்டின் அபிவிருத்திக்கு செலவிடமுடியும்.

இவ்வாறுகாணி நீர்ப்பாசன மகாவலி அமைச்சர் காமினி அத்துகோறள குருநாகல் மாவட்டத்தில் உள்ள வென்னொருவேவா கிராம புனரமைப்பு வேலைகளை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றும் போதுதெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அரச நிர்வாகத்தின் கீழ் பெருந்தோட்டத் தொழில் பெருமளவில் நட்டமடைவதைவிட தனியார்துறையிடம் நிர்வாகத்தை கையளிப்பது சிறந்தது எனத் தெரிவித்தார்.

## அலங்கார உற்சவம்

[பருத்தித்துறை]

மந்திகை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 14 ஆம்திகதி ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறவுள்ளது. இம் மாதம் 23 ம் திகதி சங்காபிஷேகமும் மாலை கலைநிகழ்ச்சிகளும் 24ம் திகதி வயிரவர் மடையும் இடம் பெறவுள்ளன.

## மாத்தளையில்

# வயிற்றோட்ட நோய்க்கு இதுவரைநால்வர் பலி

மாத்தளை மாவட்டத்தில் பரவி உள்ள வயிற்றோட்ட நோய் காரணமாக இதுவரை நால்வர் பலியாகி உள்ளனர்-

பன்சலதன்ன அரசதோட்டத்தில் 7பேர் வயிற்றோட்ட நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இத்தோட்டத்தைச் சேர்ந்த குழந்தை யொன்று மரண மடைந்துள்ளதாகவும் மாத்தளையில் இந்நோய்காரணமாக 31பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 10 வீதமானோர் இரத்த வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இந்நோய் இம் மாவட்டத்தில் உள்ள சுமார் 16 கிராமங்களில் பரவி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

# செட்டிக்குளம் பகுதியில் தீவிர குடியேற்றம்

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதாரநிலைமை சீர்கேடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மருத்துவ சுகாதாரநிலைமைகள் சீர்கெட்டிருக்கின்றன. இங்குள்ள அரச மருத்துவ மனையில் தேவையான அளவு மருத்துவர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் நீண்டகாலமாக நியமிக்கப்படவில்லை. மாவட்டம் முழுவதற்கும் ஒரேயொரு மருத்துவர்மட்டுமே கடமையாற்றி வருகிறார்.

இதைவிட இவ்வைத்திய சாலைக்குத் தேவையான மருந்துப் பொருள்களும் பற்றாக்குறையாக உள்ளது. இம் மருந்துப் பொருள்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (க)

# அரசியல் கொந்தளிப்பை திசைதிருப்பும் நடவடிக்கை

# அகதிகளை நிர்ப்பந்திக்கும் சூழ்நிலை உருவாக்கப்படுகிறது

### -கருணாநிதி கருத்து

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலையின் பின் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக தமிழ்நாட்டில தொடர்ச்சியாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை புதுடில்லி சும்மா இருந்து பார்த்துக் கொண்டிருக்ககூடாது என திராவிடமுன்னேற்றகழக தலைவர் மு கருணாநிதி தெரிவித்தார்.

தி.மு.க.தலைவராக அவர் தெரிவுசெய்யப்பட்டபின் பத்திரிகையாளரைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள்மீது தடைவிதித்ததற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் பொருட்டு தமிழ்நாட்டிற்கு வரும் மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி காட்டுவதென பாட்டாளி மக்கள் கட்சியின் முடிவுகுறித்து அவர் தெரிவிக்கையில், "இது அவர்களுடைய முடிவு நாங்கள் கிளர்ச்சியை ஆரம்பிக்கமாட்டோம் அவர்களின்கிளர்ச்சியைநாங்கள் ஆதரிப்போமா என்பதுபற்றி என்னால் ஒன்றும் கூறமுடியாது" என தெரிவித்தார்.

வலுக்கட்டாயமாக இலங்கைத் தமிழ்மக்களை திருப்பி அனுப்பமாட்டோம் என இந்திய அரசாங்கம் கூறுகின்ற போதிலும் அவர்கள் நிர்ப்பந்தமாக வெளியேறுவதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

1988 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத்தமிழர் பிரச்சினை குறித்து எமது நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை. நாங்கள் இலங்கைத் தமிழ் மக்களின் சேமநலத்தையும், தீவிரவாதிகளின் நலன்களையும் வேறுபடுத்தியுள்ளோம்.

இலங்கைத்தமிழர் பிரச்சினை குறித்து யார் பேசப் போகிறார்கள் என்பதே முக்கியமான கேள்வியாகும் இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## கும்பகோண சம்பவம் இருதமிழக இளைஞர்கைது

(சென்னை)

கும்பகோணம் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு சம்பந்தமாக இரண்டு தமிழக இளைஞர்கள் தமிழகப்பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் மாணவர் அரசியல் நடவடிக்கைக்குழு என்னும் அமைப்பைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் பாபநாசம் சித்திரவேலு என்னும் ராஜவேல் என்பவர் திருச்சியில் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். கைதான மற்ற நபர் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்தின் காவலாளர் ஆவார்

## உடன்படிக்கை கைச்சாத்து

(றியோடி ஜெனேரோ)

பிரேசிலின் தலைநகர் றியோடி ஜெனேரோவில் நடைபெறும் சூழலும் அபிவிருத்தியும் சம்பந்தமான உச்சிமநாட்டில் கலந்து கொள்ளும் அரசாங்கப் பிரதிநிதிகள் தாவரங்களும் கால்நடைகளும் அருகிவருவதைக் கட்டுப்படுத்தும் உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டு வருகின்றனர்.

## தலைமறைவு வாழ்க்கை முடிவடையும் வாய்ப்பு

### - சல்மான் ருஷ்டி

(லண்டன்)

பிரிட்டனிலும், ஈரானிலும், அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதால் தலைமறைவு வாழ்க்கையிலிருந்து தாம் வெளிவர வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்து இருப்பதாக பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டி கூறியுள்ளார்.

ஏ பி சி டெலிவிசனுக்குப் பேட்டியளித்த அவர் அரசியல்வாதிகள் கலந்து பேசி தமக்கு சாதகமான முடிவை எடுப்பார்கள் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

சல்மான் ருஷ்டி எழுதிய சாத்தானின் வேதங்கள் என்னும் நூல் அவதூறானது எனக் குறிப்பிட்ட ஈரானின் ஆன்மீகத் தலைவர் கொமெய்னி அவருக்கு மரணதண்டனை விதித்தது தெரிந்ததே.

## காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவவேண்டாம்

ஜம்மு கஷ்மீரில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு பொருளுதவி அளிக்க வேண்டாம் என்று பாகிஸ்தானிடம் பிரிட்டன் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுள்ளது அதில் மேலும் அம்மாநிலத்தின் அடிப்படைப் பிரச்சினை மீண்டும் அரசியல் பணிகளை துவக்குவதுதான் என்றும் கூறியுள்ளது

# மத்திய வங்கிகணக்காளர் அறிக்கை விசாரிக்க ஆணைக் குழு தேவை

### - சுதந்திரக்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

மத்திய வங்கியில் வரவு செலவுக் கணக்குத் தொடர்பாக கணக்காளர் நாயகத்தின் 1990 ஆம் ஆண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விஷயங்கள் குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காளர் நாயகத்தைச் சாடியுள்ளார். இதன் மூலம் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாகவுள்ள அந்த அதிகாரி தன் கடமைகளைச் செய்வதற்குத் தடையாக இருமன்னர் கொண்டிருந்தகாலத்துக் குப் பிரதமர் மாசு கற்பித்துவிட்டார். ஆகவே மக்கள் உண்மையைத் தெரிந்து கொள்ள விசாரணைக் குழு

மாத்தளையில்

குத்திற்கு செல்லமுடியும். இவ்வாறுகாணி நீர்ப்பாசன

# வயிற்றோட்ட நோய்க்கு இதுவரைநால்வர் பலி

மாத்தளை மாவட்டத்தில் பரவி உள்ள வயிற்றோட்ட நோய் காரணமாக இதுவரை நால்வர் பலியாகி உள்ளனர்.

பன்சலதன்ன அரசதோட்டத்தில் 7பேர் வயிற்றோட்ட நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இத்தோட்டத்தைச் சேர்ந்த குழந்தை யொன்று மரண மடைந்துள்ளதாகவும் மாத்தளையில் இந்நோய்காரணமாக 31பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 10 வீதமானோர் இரத்த வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இந்நோய் இம் மாவட்டத்தில் உள்ள சுமார் 16 கிராமங்களில் பரவி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

# செட்டிக்குளம் பகுதியில் தீவிர குடியேற்றம்

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள ஒன்பது கிராமங்களிலும் சிங்களவரையும், முஸ்லிம்களையும் குடியேற்றும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பெரியபுளியங்குளம், நெடுங்கரைச்சேனை, பெரியநொச்சிமுனை கிட்டன்குளம் கிரியான்குளம், முதலியான்குளம், கரம்பைமடு, முகத்தான்குளம், பவற்குளம் ஆகிய கிராமங்களிலேயே தீவிர குடியேற்றங்களுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

பாவற்குளம் பகுதியில் சிங்கள, முஸ்லிம் குடியேற்றங்கள் சிறிலங்கா இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இவர்களின் பாதுகாப்புக்கென பொலிஸ் நிலையம் ஒன்றும் மேலும் முஸ்லிம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பகிஷ்கரிப்பை

காண்பதன் முக்கியத்துவத்தை மனதில் கொண்டு பகிஷ்கரிப்பு முடிவிலிருந்து தெரிவுக் குழுவிற்கு விலக்களிப்பது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆராய்ந்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்

இன்றன.

ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்திப்பதற்கான நேர காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றித் தமிழ்க் கட்சிகள் கருத்து வெளியிட மறுத்துள்ளன.

இதேவேளை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ தமிழ்க் கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்க இணக்கம் தெரிவித்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

ஜனாதிபதி- தமிழ்க்கட்சிகள் சந்திப்பு அடுத்த வாரம் நடைபெறவுள்ளது சந்திப்புக்கான நாள் குறிப்பிடப்படவில்லை.

பாதுகாப்பு

அத்துடன் சுகாதார அமைச்சு மற்றும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் ஆகியனவும் தனியார் மருந்து இறக்குமதியாளர்களிடம் இருந்தே மருந்துகளைக் கொள்வனவு செய்வது குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்

வெற்றியளிக்கவில்லை. இதனால் யாழ். மாவட்டத்திற்குள் எடுத்து வரப்படும் உணவுப்பொருள்களினளவு குறைவடைந்துள்ளது. (க)

தீர்வு

கொடுக்காத கெடுபிடிப்போக்கைக் கடைப்பிடிப்பதால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவைப் பகிஷ்கரிப்பதென்ற தற்காலமுடிவைச் சுதந்திரக்கட்சி எடுத்ததாகஅவர் மேலும்தெரிவித்தார்.

தமிழ், முஸ்லிம் கட்சிகள் இனப்பிரச்சினைக்கான தமது தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளன. ஆனால், ஆளும் கட்சியான யூ என் பி அதனை திட்டத்தைக் கையளிக்கவில்லை என்றும்,

பாராளுமன்றத்தெரிவுக்குழுவின் தலைவர் பதவியில சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்தான் இருக்கிறார் என்றும், தொடர்ந்தும் தமது கட்சி தமிழ் - முஸ்லிம் கட்சிகளுடன் இனப்பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடும் என்றார் அவர்

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதாரநிலைமை சீர்கேடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மருத்துவ சுகாதாரநிலைமைகள் சீர்கெட்டிருக்கின்றன. இங்குள்ள அரச மருத்துவ மனையில் தேவையான அளவு மருத்துவர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் நீண்டகாலமாக நியமிக்கப்படவில்லை. மாவட்டம் முழுவதற்கும் ஒரேயொரு மருத்துவர்மட்டுமே கடமையாற்றி வருகிறார்.

இதைவிட இவ்வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துப் பொருள்களும் பற்றாக்குறையாக உள்ளது. இம் மருந்துப் பொருள்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (க)

# அரசியல் கொந்தளிப்பை திசைதிருப்பும் நடவடிக்கை

(கொழும்பு)

தென்பகுதியில் ஏற்படும் அரசியல் கொந்தளிப்பை திசைதிருப்பவே அரசு வடக்கில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என கொழும்பு புதிய நகரமண்டபத்தில் பத்திரிகையாளர் நடாத்திய அரசுக்கெதிரான கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில் இலங்கையில் ஏற்படும் பொருளாதார தாக்கங்களாலும் அரசியல் படுகொலைகளாலும் நாளுக்கு நாள் தென்பகுதியில் அரசுக்கெதிராக மக்கள் கொந்தளிப்பு அதிகரித்து வருகிறது இதனைச்சமாளிக்கவே அரசு வடக்கில் தாம்பாரிய தாக்குதல்களை விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொள்வதாகக்கூறி தென்னிலங்கை மக்களைத் திசைதிருப்புகிறது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

# பாராளு. உறுப்பினருக்கு சம்பளம் போதாதாம்

-பிரேமா தெரிவிப்பு

(குருநாகல்)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கப்போதாததால் அவர்கள் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை உதறித் தள்ளிவிட்டு ஆடைத் தொழிற்சாலைகளில்சேரலாம் என்று நான் அஞ்சுகிறேன். இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

குருநாகலில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றைத் திறந்து வைத்துப் பேசியபோது அவர் இவ்வாறு கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பொதுவேலைகளும், பொறுப்புக்களும் அதிகம். தமது தொகுதிகளில் நன்மை தீமை நடைபெறும்போது பண உதவி வழங்கவேண்டியுள்ளது. தமது தொகுதிகளில் இருந்து கொழும்புக்குப் பிரயாணம்செய்யவேண்டியுள்ளது இதனால் ஏற்படும் செலவுகளைச் சமாளிக்க அவர்கள் ஆடைத் தொழிற்சாலைகளில் சேர்ந்தாலும் சேரலாம் என்றார் அவர்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில், எதிர்க்கட்சிகளுக்கு இவ்வாறு கூறவும் மற்றவர்களின் நடத்தைக்கு அவமானம் கற்பிக்கவும் தான் முடியும். எதிர்க்கட்சிகள் இப்போது யு. என். பியிலிருந்து விலக்கப்பட்டவர்களைக் கைக்குள் போட்டுள்ளது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை வெளியிடுவதுடன் ஆபாசமான எழுத்துக்களையும் பிரசுரிக்கிறார்கள் என்றும்,

எமது கட்சியில் தாம் நினைத்தபடி ஆட்சி சிலரால் முடியவில்லை. அதனால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்றார்.

# முல்லையில் எறிகணை வீச்சு

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து பொதுமக்கள் குடியிருப்பு மீதான எறிகணை வீச்சுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது.

இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்திருந்த போதும் எறிகணை வீச்சு தொடர்ந்து வருகிறது.

இடம் பெயர்ந்து சென்ற மக்கள் மீளக் குடியமர்வதை தடுக்கவே இவ் எறிகணை வீச்சு என தெரிவிக்கப்படுகிறது.

யல் வாதிகள் கலந்து பேசி தமக்கு சாதகமான முடிவை எடுப்பார்கள் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

சல்மான் ருஷ்டி எழுதிய சாத்தானின் வேதங்கள் என்

ஜம்மு கஷ்மீரில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு பொருளுதவி அளிக்க வேண்டாம் என்று பாகிஸ்தானிடம் பிரிட்டன் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுள்ளது அதில் மேலும் அம் மாநிலத்தின் அடிப்படைப் பிரச்சினை மீண்டும் அரசியல் பணிகளை துவக்குவதுதான் என்றும் கூறியுள்ளது

# மத்திய வங்கிகணக்காளர் அறிக்கை விசாரிக்க ஆணைக் குழு தேவை

- சுதந்திரக்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

மத்திய வங்கியில் வரவு செலவுக் கணக்குத் தொடர்பாக கணக்காளர் நாயகத்தின் 1990 ஆம் ஆண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விஷயங்கள் குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கும்படி சிறிலங்கா சுதந்திரக்கட்சி கோரியுள்ளது.

கம்பஹா மாவட்ட சுதந்திரக்கட்சிபாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் ஜெயக்கொடி ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இளைப்பாறிய உச்ச நீதிபதி தலைமையில் மூன்று பேரடங்கிய விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கும்படி கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், பிரதமர் டி. பி. விஜெயதுங்கா பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையில், பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாயுள்ள கணக்காளர் நாயகத்தைச் சாடியுள்ளார். இதன் மூலம் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாகவுள்ள அந்த அதிகாரி தன் கடமைகளைச் செய்வதற்குச் தடையாக இருந்துள்ளார் என்றும்,

கணக்காளர் நாயகம் பற்றி மக்கள் கொண்டிருந்தநம்பிக்கைக்குப் பிரதமர் மாசு கற்பித்துவிட்டார். ஆகவே மக்கள் உண்மையைத் தெரிந்து கொள்ள விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளது.

ஜோசெப்

வைத்தியே கொல்லப்பட்டனர். மேலும் சிலர் காயமடைந்தனர்

தப்பியோடிய கைதிகளில் இருவர் மின்சாரம் பாய்ச்சப்பட்டிருந்த கம்பி வலையில் சிக்குண்டு இறந்துள்ளனர் என்றும் தகவல் கிடைத்துள்ளது

இக் கைதிகள் தப்பி ஓட்டம் பற்றி வவுனியா இராணுவத் தலைமையகம் எதுவித தகவலையும் வெளியிடவில்லை. ஆனால்-சம்பவத்தை நேரில் கண்டவர்கள் சிலர் இதனை வெளிபிட்டுள்ளனர்.

தப்பியோடிய கைதிகளைக் கைது செய்யும் முகமாக வவுனியா நகரையும், நகரை அண்டிய பகுதிகளையும் இராணுவம் சுற்றிவளைத்து தேடும் வேலையில் ஈடுபட்டுள்ளதாம். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லையாம். (தி)

வீரச்சாவு

அமிர்தலிங்கம் வெலிங்டன் ஆனந்தராசா (சிவபாலன் முழங்காவில், நாச்சிக்குடா, மன்னார்)

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வதிவிட அனுமதிப் பத்திரம் வெளிநாட்டவருக்கு மறுப்பு

(கொழும்பு)

குவைத் வெளிநாட்டவர்களுக்கு வதிவிட அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிறுத்தியுள்ளது. என்று வெளிவந்த தகவலை ஏ எவ் பீ. செய்தியொன்று உறுதி செய்துள்ளது கடந்த திங்கள் முதல் வெளிநாட்டவர்களுக்கு வதிவிட அனுமதி வழங்கும் முறை நிறுத்தப்பட்டுள்ளதாக அந்தச் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

குவைத்தின் இந்தத் திடீர் முடிவையடுத்து குவைத்தில் தொழில் பார்க்கும் வெளிநாட்டவர் குழப்பமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

வதிவிட அனுமதியைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை, குவைத்தில் தொழில்பார்க்கும் இலங்கைப்பிரஜைகள் பாதிக்கப்படுவார்களா என்பதைத் தெரிந்து கொள்ள கொழும்பு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்ஜெனிவாவில் உள்ள சர்வதேச தொழில் அமைப்புடனும் (ஐ. எல். ஓ.) குவைத்திலுள்ள சிறிலங்காத் தூதுவருடனும் அவசரமாகத் தொடர்பு கொண்டுள்ளது.

குவைத்திலிருக்கும் இலங்கையர் விஸா மற்றும் வேலை அனுமதி பெற்று வந்த சென்றவர்கள் என்றும். இம்முடிவு அவர்களைப் பாதிக்காது என்றும் சொல்லப்படுகிறது.

# வாகன வரிசை விபரம்

06-06 1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம்-4219

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம்-3325

இராணுவம் அனுமதித்த வாகன வரிசை இலக்கம்-3294

இராணுவம் அனுமதித்து வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

28-3306, 42-3419, 24-4664, 27-8155 40-6979, 28-3429, 26 1658 41-9855, 28 9633, 24-5119 26-3962, 26-7286, 26-3068, 26-4450 41-8449, 28-6020 42-4126 24-6811, 27-1141, 26 3555 26 6398, 27-7653, 27-9458, 37-1485,

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

24-9938, 26 9611, 41-7124, 24-6545, 41-9912, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் -28 போர்ட்-03

★ தனியார் வாகன உரிமையாளர்களின் நன்மை கருதி வாகனவரிசை விபரம் எமது பத்திரிகையில் தொடர்ந்தும் வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது